**மஹஓய பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

மஹஓய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மஹஓய பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )

---------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலே வேலை நிறைவு செய்யப்பட்ட ரூபா 5,220,413 ஆன 03 நிர்மானங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்படவில்லை. | 2022 ஆம் வருடத்திலே சீர் செய்யப்பட்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 04 நிர்மானப்பணிகளுக்காக வரைவு அமைச்சிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 5,178,825 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்தில் சீர் செய்து புதிய கடன் கொடுத்தோர் பதிவேடொன்றும் கடன்பட்டோர் பதிவேடொன்றும் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடன் கொடுத்தோர் இருவருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 5,040,898 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்தில் சீர் செய்து புதிய கடன் கொடுத்தோர் பதிவேடொன்றும் கடன்பட்டோர் பதிவேடொன்றும் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (ஈ) | ஜேசீபீ இயந்திர திருத்த வேலை நடவடிக்கைகள் மற்றும் சேதனைப்பசளை மத்திய நிலையத்தை நிர்மானிப்பதற்காக மீளாய்வாண்டிலே பெற்றுக்கொடுக்கப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 1,697,000 முற்பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை கட்டுநிதியத்திலிருந்து சேர்க்கப்பட்டு சீர் செய்து அந்தந்தொகை முற்பண பதிவேட்டில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

### 1.6.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் மற்றும் பேரேட்டின் பிரகாரம் கடன் கொடுத்தோர் மீதிகளுக்கிடையில் ரூபா 1,185,079 வேறுபாடொன்று காணப்படுகிறது. | இந்த பெறுமதியை கடன் கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கப்படாமை தொடர்பாக ஆராய்ந்து சீர் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவு ரூபா 4,148,060 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 388,145 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வாடகை**<br>2021 திசெம்பர் 31 இல் அறவிடப்படவேண்டிய ரூபா 4,059,274 கடை வாடகையில் நூற்றுக்கு 72 அவ்வாறெனில் ரூபா 3,329,235 வை 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தும் | நிலுவை கடை வாடகை உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்கள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | | |
| (ஆ) 2021 டிசெம்பர் 31 இல் விலை மனு ஊடாக குத்தகை வழங்குதல் மூலம் பெறப்பட வேண்டிய ரூபா 1,379,062 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசங்களில் உள்ள இடங்களில் வெட்டப்பட்ட மண் கியூப் 28,000 க்கு உரிய போக்குவரத்துக் கட்டணம் கியூப் ஒன்றிற்கு தலா ரூபா 200 வீதம் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமல் மணல் அகழ்விற்காக விண்ணப்பிக்கப்பட்ட கோரிக்கையை அடிப்படையாக வைத்து 14,580 மணல் கியூப்பிற்கு தலா ரூபா 100 வீதம் போக்குவரத்துக்கட்டணமும் அகழப்பட்ட 28,000 மணல் கியூபில் 17,971 கியூப் மாத்திரம் வீதியினூடாக வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கு போக்குவரத்துக்கட்டணம் தலா ரூபா 100 வீதமும் அறவிடப்பட்டதன் காரணமாக சபைக்கு ரூபா 2,344,900 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | மஹவெலி அபிவிருத்தி அதிகார சபையினை சம்பந்தப்படுத்தி சபைக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை அறவிடுவதற்காக எழுத்து மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 32,083,469 செலவில் நிறைவு செய்த விற்பனை நிலையத்தின் வியாபார கடைத்தொகுதியில் அமைந்துள்ள 24 கடைகளை சபையினால் வாடகைக்கு வழங்கியிருந்த போதிலும் அவற்றை வாடகை உரிமையாளரினால் 05 வருடங்களுக்கு அதிக காலமாக பாவனைக்குட்படுத்தாமல் மூடப்பட்டிருந்ததுடன் கடைக்காக அறவிடப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 3,306,033 நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக எவ்வித சட்ட நடவடிக்கையும் சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் சபையினால் தீர்மானமொன்றை மேற்கொண்டு இனிவரும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |